
சிறுவர்

# அமுதம்

19. 9 .97

கிண்ணம்: 8 எண்ணம்: 9





சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை.

KINDERLITERARISCHES MAGAZIN

✷ உன்னுடைய ஆத்மாவும் உலகத்தில் உள்ள ஆத்மாக்களும் ஒன்று தான். நீ, நான், முதலை, ஆமை, ஈ, கருடன், கழுதை, எல்லாம் ஒரே உயிர். அந்த உயிரே தெய்வம்.

-சுப்பிரமணிய பாரதியார்-

## அன்புச் சிறுவர் சிறுமியரே!

புரட்டாதி, ஐப்பசி (செப்ரெம்பர், அக்டோபர்) மாத இதழ்கள் உங்கள் கைகளில் தவழ்கின்றன. தடங்கல்களுக்கு மத்தியிலும் இவ்விதழ்களைத் தருவதில் மனம் பெருமிதம் கொள்கிறது. எம் இனத்துக்காக, இனிய எம் தமிழ்மொழிக்காக இச் சிறு பணியையாவது செய்ய முடிகின்றதே!

எம்மைப் போன்ற சாதாரணமானவர்கள் இப்படிச் சில பணிகளைத் தான் செய்ய முடிகின்றது. முடியும்!. செப்ரெம்பர் மாதம் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரும், ஒக்டோபர் மாதம் மகாத்மா காந்தியும் எமக்கு நினைவுக்கு வருவார்கள். இவர்கள் தன்நலம் மறந்து நாட்டுக்கு உழைத்தவர்கள். தம் நாட்டின் சுதந்திரத்துக்காகவும், சமூக நலனுக்காகவும் தம் வாழ்நாட்களை, தம் இன்பதுன்பங்களை துறந்தவர்கள் என்றே சொல்லலாம்.

மகாத்மாவோ, பாரதியோ நினைத்திருந்தால் பெரும் செல்வந்தர்களாக வாழ்ந்திருக்கலாம். அப்படி அவர்கள் வாழ்ந்திருந்தால், இன்று இவர்களை யாராவது அறிந்திருக்க முடியுமா? இருவருமே மனிதர்கள் தான். மாமனிதர்கள். இவர்களின் பின் இன்னொரு மகாத்மாவையோ, பாரதியையோ காண முடியவில்லை. இவர்களது சொந்த வாழ்க்கையை யாராவது நினைத்துப் பார்த்ததில்லை. பொதுச் சேவையே இவர்களை உலகத்துக்கு எடுத்துக் காட்டியது.

சமீபத்தில் சமூக சேவைக்காகத் தம்மை அர்ப்பணம் செய்த இரு பெண்மணிகளை இந்த உலகம் இழந்து விட்டது. ஒரு கணம், உலகம் அசைவற்று நின்று விட்டது என்றே சொல்லும் அளவுக்கு உலக மக்களை உலுக்கி விட்டது. சீமாட்டி டயானா நினைத்திருந்தால் பிரித்தானிய அரச குடும்பத்தில் ஒருத்தியாகவே வாழ்ந்திருக்கலாம். சொந்த வாழ்க்கையைத் துறந்து பொது வாழ்க்கையில் தன்னை அர்ப்பணம் செய்து கொண்டவர். இந்த இளம் பெண்ணின் அகால மரணம் மிகவும் பரிதாபத்துக்கும் வேதனைக்கும் உரியது.

அல்பானிய தேசத்துக் குடிமகளான தெரேசா மெசிடோனியாவில் பிறந்து, அயர்லாந்தில் வளர்ந்தவர். கன்னிகாஸ்திரியாக வாழ்க்கையைத் தொடங்கிய "மெடம் தெரேசா" சமூகசேவைக்காகத் தம்மை அர்பணித்துக் கொண்டு வாழ்ந்ததோ இந்திய தேசத்தில் தான். அன்னை தெரேசா என அன்பாக அழைக்கப்பட்ட இவர் தம் தள்ளாத வயதிலும் மக்களுக்குச் செய்த சேவைகளைக் கணக்கிட முடியாது. அன்னை தெரேசாவும் டயானாவின் மரணச் சடங்கின் முன்தினம் காலமானார். ஒரே காலகட்டத்தில், உலகத்தைக் கவர்ந்த மனிதநேயம் மிக்க, இவ்விரு பெண்மணிகளையும் உலகம் இழந்து விட்டது வேதனைக்குரியதே!

இந் நால்வருக்கும் சிறுவர் அமுதம் தன் அஞ்சலியைத் செலுத்திக் கொள்கிறது.

ஆசிரியை.

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

தீர்க்கதரிசிகள் தங்களுடைய நாக்கினால் உபதேசிப்பதில்லை. வாழ்ந்து காட்டுவதன் மூலம் உபதேசிக்கிறார்கள்.

-மகாத்மா காந்தி-

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

## வினாவிடைப்போட்டி முடிவு:

1. ஆசியக் கண்டத்தில் அன்னை தெரேசாவுக்கும் (இந்தியா), ஆங்ஸான்சூகிக்கும் (பர்மா) நோபல் பரிசு கிடைத்திருக்கின்றது. இந்தப் பரிசு இதற்காகத் தான் கிடைத்தது.
சந்தை, அவமானம், தாமரை, அன்னப்பறவை, அவதானம். (சமாதானம்)

2: 1978ம் ஆண்டு ஏற்பட்ட பூகம்பத்தில் ஆறு லட்சத்துக்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதுவே மிகப் பெரிய பூகம்பமாகக் கருதப் படுகின்றது. இது இந்த நாட்டில் ஏற்பட்டது.
சீர்வரிசை, அன்னாசி (சீனா)

3. உலகில் முதல்முதல் நினைவுத் தபால் தலைகளை (முத்திரை) வெளியிட்ட நாடு இது.
அமாவாசை, மெக்கா, மாரி, சொர்க்கம், அதிகாரம். (அமெரிக்கா)

4. ஏரியானா, கொரசான், அஸ்வஸ்தான் இவை என்ன என்று நினைகின்றீர்கள்! ஒரு நாட்டின் பழைய பெயர். நாடு இது.
ஆட்டம், கப்பம், அதிகாரி, இனிமை, அபஸ்வரம், நிதானம், மின்னல். (ஆப்கானிஸ்தான்)

5. திரை அரங்குகளே இல்லாத நாடு இது.

சந்திரன், அளவு, அவதி, அமைதிப்படை, கைரேகை, பிணக்கு, பாதயாத்திரை' (சவுதி அரேபியா)


எழுதியவர்கள்:

| | |
|---|---|
| 1.கௌரிசங்கர் சரவணபவன் | Solingen |
| 2.தர்ஷன் சரவணபவன் | Solingen |
| 3.மஞ்சுளா சிவசம்பு | Lohmar |
| 4.நிரோஷினி ஹரிச்சந்திரன் | Wildemann |
| ❤5ஜெயானந்தன் கண்ணன் | Berg. Gladback |
| 6.மோகன் இரத்தினசபாபதி | Eschelbronn |
| 7.ஜெயமாலா இரத்தினசபாபதி | Eschelbronn |
| 8.ஜெயதீபாஇரத்தினசபாபதி | Eschelbronn |

அடையாளம் இடப்பட்டவர்கள் பரிசைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

◆◆பஹாமாஸ் கிட்டத்தட்ட 700 தீவுகளும் 2000 பாறைகளும் கொண்ட ஒரு நாடு. 30 தீவுகளில் மட்டுமே மக்கள் வசிக்கிறார்கள். 85 சதவீதம் நீக்ரோ இனத்தவரே வாழ்கிறார்கள்.

# கழுதை



கழுதை என்ற மிருகத்தை நினைவு வந்தாலே சிரிப்புத் தோன்றும். கூடவே கேலியாகவும் தோன்றும். நீங்கள் ஏதாவது குளப்படி செய்தால் அப்பாவோ, அம்மாவோ கழுதை என்று திட்டுகின்றார்கள். ஏதாவது நல்ல காரியம் செய்யத் தொடங்கும் போது கழுதை கத்தும் சத்தம் கேட்டால் நல்ல சகுனம் என்கிறார்கள். ஆனால் கழுதைச் சத்தத்தை யாராவது இனிமையானது என்று

சொல்லுவார்களா?. அவ்வளவு காட்டுக் கத்தலாகக் கேட்க முடியாததாக இருக்கும்.

கத்துவது மட்டும் தான் சகிக்க முடியாது என்று கூற முடியாது. உருவமே பார்க்க முடியாத உருவம் தான். அவ்வளவுக்கு அவலட்சணமாக இருக்கும். கிட்ட நெருங்கினால் உதைத்து விடுமோ என்று பயம் வரும். ஆனால் கழுதை பொறுமைக்குப் பெயர் பெற்றது. பொதிகள் சுமக்கவும், காடுகள், மலைகளைக் கடக்கவும் கழுதை நன்கு பயன் படும். அரேபியாவில் நிலத்தை உழவு செய்யவும், சவாரி செய்யவும் கூடக் கழுதையைப் பயன் படுத்துகின்றார்கள்.

கழுதை மணித்தியாலத்துக்கு மூன்றிலிருந்து ஐந்து கிலோமீற்றர் வரை பொதி சுமந்து செல்லும். பழகிய பாதையில் வழிகாட்டி இல்லாமலே நடந்து செல்லும். கழுதை மனிதர்கள் நினைப்பது போல அறிவில் குறைபாடுள்ள மிருகம் அல்ல. மிகுந்த கூர்மையான அறிவுள்ளது. மனிதர்களை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளும். பொறுமையான மிருகமான கழுதை அளவுக்கு மீறிய துன்பத்தை அடையும்போது, மனிதர்களைப் கடித்து விடுவதும், உதைத்து விடுவதும் உண்டு.


கழுதை நின்றபடியே நித்திரை செய்யும். குதிரை இனத்தைச் சேர்ந்தது. செல்லுலோஸ் (Cellulose) என்னும் பிரிவைச் சேர்ந்தது. தண்ணீரைக் கண்டால் பிடிப்பதில்லை. குறைந்த அளவிலேயே தண்ணீர் குடிக்கும். குளிப்பதில்லை. மழையில் நனைந்தால் சரி. கழுதையின் பால் மருந்தாகப் பயன்படுகின்றது. காசநோய் உள்ளவர்களுக்கு மிகவும் உபயோகம் உள்ளதாக மருத்துவ நூல்கள் கூறுகின்றன. இதன் தோல் முழவு என்னும் இசைக்கருவி செய்யப்படுகின்றது. கழுதை நாற்பது வயது வரை வாழும்.

கழுதையைப் பற்றி இப்போது என்ன நினைக்கிறீர்கள்!

பலவான்கள் வெற்றியைத் தேடி ஓட மாட்டார்கள். அவர்களாக அதை நாடிச் செல்வதும் இல்லை. அது வரும் போது விருப்பு வெறுப்பின்றி ஏற்றுக் கொள்வார்கள். ஏனென்றால் துன்பமும் தூரதிஷ்டமும் தரும் அடையாளங்களும் அவர்களுக்குத் தெரியும். அவர்கள் மனவுறுதி மிக்கவர்கள். அவற்றைச் சரியாகக் கணித்தறிவார்கள்.

-ஸ்ரீ அன்னை-

## வாழ்த்தி வரவேற்போம்



தீபாவளித் திருநாள் – சுடர்
 சிரிக்கும் ஒளித் திருநாள்!
மேவும் வாழ்த்துக்களில் – பல
 மேன்மை பூத்திடும் நாள்!

எண்ணெய் நீராடி – உடல்
 ஏற்கும் சீராடை!
பண்ணும் பலகாரம் – கண்ணில்
 பட்டால் பசியாறும்!

சிதறும் முத்தாக – பூக்கள்
 சிந்தும் மத்தாப்பு!
அதிரும் வெடியோசை – கேட்டால்
 அடங்கும் இடியோசை!

ஏழை எளியவரும் – வாழவில்
 எந்த நிலையவரும்,
சூழும் உறவோடு – கூடும்
 சுவைசேர் சுபத் திருநாள்!

நரகப் பகை கொய்து – நன்மை
 நாட்டும் வகை செய்ய
வருமாம் திருநாளை – நாமும்
 வாழ்த்தி வரவேற்போம்.

– குரு.சீனிவாசன் –

# கனவின் பலன்



கோபாலன் சுந்தர், மாலி சேந்தன் நால்வரும் நண்பர்கள். எல்லோரும் விடுமுறைக்கு காட்டுப் பிரதேசம் ஒன்றைப் பார்வையிடச் சென்றனர். அங்குள்ள விடுதி ஒன்றில் தங்கினார்கள். அங்கு திருடர் பயம் அதிகமாக இருப்பதாகவும் பொருட்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கும்படியும் விடுதியின் காப்பாளர் கூறியிருந்தார். இரவு உணவை முடித்து விட்டு நண்பர்கள் பேசிக் கொண்டிருந்தனர். திருடரைப் பற்றிய கதைகளையே கதைத்தனர்.

தங்கள் தங்களுக்குத் தெரிந்த திருடர் கதைகளைப் பரிமாறிக் கொண்டனர். எல்லோரும் தூங்கச் சென்றனர். நள்ளிரவு நேரம். ஒரே இருட்டு. திடீரென்று கோபாலனின் ''கள்ளன்கள்ளன்'' என்று கத்தினான். சத்தம் கேட்ட திசையில் மற்ற நண்பர்கள் மதில் சுவரில் பாய்ந்து தப்பி ஓட இருந்த திருடனைப் பிடித்துக் கொண்டனர்.

"அகப்பட்டுக் கொண்டான் திருடன். விடுதிக் காப்பாளர் விளக்கோடு திருடன் பிடிபட்ட இடத்திற்கு வந்தார். வெளிச்சத்தில் திருடனைக் கண்ட எல்லோரும் திகைத்தனர். அவர்கள் பிடித்திருந்தது திருடனை அல்ல. கோபாலன் அவர்களின் பிடியில் இருந்தான். "என்னடா, கோபாலா! என்ன! என்று நண்பர்கள் மூவரும் ஏககாலத்தில் கேட்டனர்.

"நான் எப்படி இங்கு வந்தேன் என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன். தூங்கிக் கொண்டல்லவா இருந்தேன்." என்றான். மற்றவர்களுக்கு விஷயம் விளங்கி விட்டது. அவனை அழைத்து வந்து கட்டிலில் உட்கார வைத்தனர். தூக்கம் கலைந்ததும் கோபாலன் சிரித்துக் கொண்டே சொன்னான், "எல்லோருடைய தூக்கத்தையும் கெடுத்ததற்காக என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். திருடரைப் பற்றியே கதைத்து விட்டுத் தூங்கியதால் திருடன் சூட்கேஸைத் தூக்கிக் கொண்டு மதில் ஏறிக் குதிப்பதைப் போலக் கனவு கண்டேன்."

அதனால் தான் திருடனைப் பிடிப்பதற்காக மதிலில் ஏறிக் கொண்டாயோ! போடா, ஆழ்ந்த தூக்கத்தையே கலைத்து விட்டாயே! என்று கூறிக் கொண்டே நண்பர்கள் தங்கள் தங்கள் படுக்கைக்குச் சென்றனர்.

## போட்டிக்குப் பரிசு



மணியமும் சிவமும் ஒரு காலத்தில் நண்பர்களாக இருந்தார்கள். ஒரே இடத்தில் மணியம் அக்காவையும், சிவம் தங்கையையும் திருமணம் செய்து கொண்டனர். இருவருமே வியாபாரம் செய்து வந்தனர். சிவம் முன்பு வாழ்ந்தது போலவே,மணியத்திடம் விசுவாசத்துடனேயே வாழ்ந்து வந்தார். ஆனால் மணியத்தின் மனதில் பொறாமைத் தீ கொழுந்து விட்டு எரிந்து கொண்டது. இதனால் குடும்பங்கள் இரண்டுமே பிரிந்து விட்டன.

மணியத்தை விடவும் சிவம் வியாபாரத்தில் முன்னுக்கு வந்தார். யாரோடும் வசீகரமாகப் பேசி நாணயமாக நடந்ததால் அவருடைய கடைக்கு வாடிக்கையாளர்கள் அதிகம். கிளைக்

கடை ஒன்றும் (பலசரக்கு) திறந்திருந்தார். ஊழியர்களையும் நல்ல முறையில் கவனித்து வந்ததால் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்பட்டது. பழனி என்னும் ஊழியன் அவருடைய சொந்தப் பிள்ளையாகவே நம்பிக்கைக் குரியவனாகவே வாழ்ந்து வந்தான்.

மணியத்தாருக்கு கடும் எரிச்சலாக இருந்தது. மணியம் யாரையுமே நம்புவதில்லை. உறவினர்களைக் கூட வீட்டில் அணைத்துக் கொள்வதில்லை. அவரும் மனைவியும் இரண்டு மகன்களுமே கடையை நடத்தி வந்தனர். உதவிக்குக் கூட யாரையும் வைத்துக் கொள்வதில்லை. மணியத்தின் நண்பர் மகாலிங்கத்தின் ஆலோசனையின் பேரில், தூரத்து உறவினரான முத்துவின் மகனான ஆனந்தனை ஊழியனாகச் சேர்த்துக் கொண்டார்.

ஆனந்தனும் அவருடைய மதிப்புக்கும் நம்பிக்கைக்கும் உரியவனாக நடந்தான். நாளடைவில் மணியத்தின் கடையும் பிரபலம் அடைந்தது. ஆனந்தன் தன் வாய்ப்பேச்சால் வாடிக்கையாளர்களையும்

சேர்த்துக் கொண்டான். ஆனந்தனை நம்பியே கடையை ஒப்படைத்து விட்டு குடும்பத்தினர் அனைவரும் வெளியூர்களுக்குக் கூட மணியம் சென்று வருவார். அந்த வேளைகளில் ஆனந்தன் தனது தந்தையான மகாலிங்கத்தையும், தம்பியான இந்துவையும் உதவிக்கு அழைத்துக் கொள்வான்.

ஒரு முறை அயலூரில் உள்ள கோயில் உற்சவத்துக்காக மணியம் குடும்பத்தினர் சென்றனர். சென்றவர்கள் திரும்பி வந்த வேளையில் அவர்களுக்கு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. கடை முழுவதும் சூறையாடப் பட்டிருந்தது. அழுது புலம்பிய மணியம் குடும்பத்தினரை அரவணைத்து ஆறுதல் அளித்தது சிவத்தின் அன்பு தான்.

விலங்கு இனத்திலேயே பாலூட்டி வகையைச் சேர்ந்த இனங்களுக்கே "பல் சீரமைப்பு" உள்ளது. பொதுவாக நான்கு விதமான பற்கள் உண்டு. இவை வெட்டுப் பற்கள், கோரைப் பற்கள், முன்கடைவாய்ப் பற்கள், பின்கடைவாய்ப் பற்கள் என அழைக்கப் படும்.

# அம்மா



அம்மா எங்கள் அம்மா
அன்பான அம்மா
அணைத்தே முத்தம் தந்திடுவாள்
அம்மா எங்கள் அம்மா........

பள்ளி செல்லும் எனக்கு
பாலும் பணிசும் தந்துதிடுவாள்
பாடங்களைப் படித்திடவே
பண்பாய் அறிவைப் புகட்டிடுவாள்.......

கல்வியும் விளையாட்டும் கற்றிடவே
கலையும் அறிவும் பெற்றிடவே
கட்டிக் காக்கும் அம்மா
அம்மா எங்கள் அம்மா..........

-சி. சிவகாந்த்-

Charlie mit seiner zweiten Frau,
Lita Grey, und seinem Sohn Sydney (1926)





போலாவின் பிரச்சனையைத் தீர்த்து விட்டோம் என்று நிம்மதியை அடைந்தார் சார்லி. ஆனால் வேறொரு பெண் அவருடைய வாழ்வில் குறுக்கிட்டாள். லில்லிதா மக்மர்ரே என்ற பெண் நடிப்பதற்கு வாய்ப்புக் கேட்டு யுனைடெட் ஆட்டிஸ்ட் நிறுவனத்திற்கு வந்திருந்தாள். அங்கு சக் ரெய்னர் என்பவரைக் கண்டு தனக்குப் படவாய்ப்புத் தரும்படி வேண்டிக் கொண்டாள்.

சக்ரெய்னரோ சரியான பதில் எதுவும் கூறாமல், படப்பிடிப்பில் ஈடுபட்டார். படப்பிடிப்பை வேடிக்கை பார்த்துக் கொண்டே, லிதா ஒரு இருக்கையில்



அமர்ந்திருந்தாள். அங்கு வந்து போய்க் கொண்டிருந்த நடிகர்கள், நடிகர்களையும் வேடிக்கை பார்த்துக் கொண்டும் இருந்தாள். அப்போது அங்கு வந்த சார்லியின் கண்களில் அவள் தென்பட்டாள்.

*The Kid*, 1921

அவளைக் கண்டதும் வியப்பில் ஆழ்ந்தார் சார்லி. "ஓ! எவ்வளவு பெரியவளாக வளர்ந்து விட்டாள்." என்று தனக்குள் கூறிக் கொண்டார். அதற்குக் காரணமும் இருந்தது. சார்லியின் எதிர் வீட்டுக்காரரான சக்ரெய்னரின் பையனின் பால்ய பருவத்துத் தோழியான லிதாவை, The kid- தி கிட் படத்திலும், வேறொரு படத்திலும் சிறு வேடத்தில் அவள் நடித்திருந்தாள்.

அவளை அவருக்குப் பிடித்துப் போகவே, லிதாவை வாரத்துக்கு 75 டொலர் சம்பளத்திற்கு ஒப்பந்தம் செய்து கொண்டார். நடிகை என்னும் வரம்பை மீறிச் சார்லியும் லிதாவும் பழக ஆரம்பித்தனர். அதை அறிந்த லிதாவின் அன்னை தன் கண்டனத்தைத் தெரிவித்தாள். 1924ம் ஆண்டில் சார்லி மெக்சிக்கோவில் லிதாவை முறைப்படி திருமணம் செய்து கொண்டார்.

இதற்கிடையில் பெவர்லி ஹில்ஸில் பெரிய மாளிகை ஒன்றைக் கட்டினார் சார்லி. அங்கு தன் மகள் வீடு என்ற உரிமையில் லிதாவின் தாயாரும் நிரந்தரமாக வந்து தங்கினாள். உறவினர்களும் அங்கே வந்து தங்கினார்கள். இக் கால கட்டத்தில் "எ வுமன் ஒவ் பாரீஸ்" (A Woman of Paris) படம் மகத்தான வெற்றி பெற்று ஓடிக் கொண்டிருந்தது.

இதே வேளையில் சார்லிக்கும், இரண்டாவது மனைவியான லிதாவுக்கும் இடையிடையே சச்சரவுகள் ஏற்படத் தொடங்கின.

-தொடரும்-

## வெடி (பட்டாசு)



வெடிகள், மத்தாப்புக்களில் தான் எத்தனை எத்தனை வகைகள். நம் நாட்டில் கோயில் திருவிழாக்களிலும், திருமண விழாக்களிலும், மத்தாப்புக்கள், வாணவெடிகள் வெடிப்பதுண்டு. அது அந்தக் காலம் தான். இன்று துப்பாக்கி வெடிகளும், வெடிகுண்டுகளுமே நம் நாட்டில் கேட்டுக் கொண்டிருப்பது வேதனைக்குரியதே! ஆனாலும் பட்டாசு வெடிகளை நாம் வாழும் நாடுகளில் புது

வருடப் பிறப்பின் போது நீங்களும் கொளுத்தி மகிழ்ந்திருப்பீர்கள்.

வெடி எப்படி நம் வாழ்க்கையில் தன்னைப் பிணைத்துக் கொண்டது என்பதைப் பார்ப்போமா?

மனிதன் கடல் உப்பைச் சமையலில் பயன்படுத்தத் தொடங்கிய நேரத்தில், இந்த உப்பு நெருப்பில் தவறிச் சிந்தும் வேளையில் பலநிற பேதங்களுடன் வர்ணப் பொறிகள் பறப்பதை அவதானித்தான். இதைப் பார்த்த மனிதனுக்கு இதை மற்றவர்களுக்கு வேடிக்கை காட்டும் எண்ணம் தோன்றி இருக்க வேண்டும்.

சீனதேசமே வெடி என்ற தயாரிப்பில் இறங்கி வெடியை உலகம் முழுவதும் அறியத் தந்தவர்கள். பழங் காலத்தில் சீனநாட்டில் பூதம், பேய், பிசாசுகளை விரட்டுவதற்காக மூங்கிற் குச்சிகளைத் தீயில் போடும் வழக்கம் இருந்தது. இவை "படீர் படீர்" என்று பெரிய சத்தத்துடன் வெடிக்கும். இதுவே பின் மூங்கில் குழாய்களுக்குள் மருந்து அடைத்து வெடிகளைச் செய்தனர். (கி.பி.960-1279)

கடதாசியில் சுற்றப்படும் வெடிகளை இக்கால கட்டத்திலேயே சீனர் கண்டு பிடித்தனர்.

இந்த வெடிகள் சீனாவில் இருந்து இந்தியா, இலங்கை போன்ற நாடுகளுக்கு வந்த வர்த்தகர்கள் மூலம் பரவியது. இந்தியாவுக்கு வந்த சீன யாத்திரீகர்களான பாஹியான், யுவான் சுவாங் போன்றவர்களின் பயணக் குறிப்புக்களில் மத சம்பந்தமான பண்டிகைகளில் வாணவெடிகள் வெடிக்க வைக்கும் பழக்கம் இருந்ததாக எழுதியிருக்கிறார்கள். சீனாவில் இருந்தே முதல் முதல் வெளி வந்ததால் “சீனவெடி” என்ற பொதுவாக வெடியைச் சொல்லுவதுண்டு.

இப்பொழுதும் தீபாவளி, பொங்கல், கோயில் திருவிழாக்கள், திருமணங்கள் போன்றவற்றில் மத்தாப்புக்களும் வெடிகளும் இடம் பெறுகின்றன. 1500ம் ஆண்டில் இருந்து இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் முக்கியத்துவம் பெற்றன. கீழ் நாடுகளுக்குள் இப்படி நுழைந்து கொண்ட வாணவெடிகள்

ஐரோப்பிய நாடுகளுக்குள் எப்படி நுழைந்தது? என்று பார்ப்போம்.

பதின்மூன்றாம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளுள் வாணவெடிகள் முக்கியத்துவம் பெற்றன. ஐரோப்பிய நாடுகளுள் இத்தாலி தான் பட்டாசை முதல்முதல் தயாரித்தது. 1768இல் பொட்டாசியம் குளோரைட் என்னும் இராசாயனம் கண்டு பிடிக்கப் பட்டது. இதன் பின் தான் பலவர்ணங்கள், பல ரகங்களில் வாணவெடிகள் தோன்றின.

பேரியம், பொட்டாசீயம் போன்ற உலோக உப்புக்களின் கலவைகள் பல வர்ண ஒளிகளை உண்டாக்குகின்றன. பேரியம் உப்பு பச்சை நிறத்தையும், ஸ்ட்ராண்ஷியம் உப்பு சிவப்பு நிறத்தையும், சோடியம் உப்பு மஞ்சள் நிறத்தையும், பொட்டாசியம் உப்பு ஊதா நிறத்தையும், கொண்டவை. இவற்றைக் கூட்டியும் குறைத்தும் கலக்கும் போது பல வர்ணங்களைத் தரும். பலவர்ண மத்தாப்புக்கள் இவ்விதம் தான் தயாரிக்கப் படுகின்றன.

# மனிதநேயம்



உலகில் தோன்றிய உயிர்களிலே
 மனிதன் சிறந்து விளங்குகின்றான்-இவன்
சிந்தை வளத்தால் செய்கைத் திறத்தால்
 தினமும் புதுமை களிக்கின்றான!!

உயர்ந்த அறிவால் விஞ்ஞானத்தால்
 புதுமை விளைத்துக் களிக்கின்றான்- இவன்
உலகம் வியக்கும் வகையினிலே
 இயல்பாய் நாளும் வளர்கின்றான்!

மனித நேயம் தன்னை சிதைக்கும்
 செயலை வளர்த்தல் நன்றோ?-நம்
திறமை தன்னை அழிவென்னும்
 சிறுமைப் பாதையில் செலுத்திடலாகுமோ?

உய்யும் வழி ஒன்றுண்டு-மனித
 நேயம் வளர்ந்து விட்டால்
மத வெறி உலகில் ஒழிந்தே என்றும்
 மனிதன் மனிதனாய் வாழ்வானே!

-சுரேஷ்-



அரச குமாரர்கள் எல்லோருமே அறிவிலும், வலிமையிலும் சிறந்து விளங்கினார்கள். அஸ்த்தனாபுரத்து மக்களுக்கு இது பெரும் ஆனந்தத்தைக் கொடுத்தது. ஆனாலும், தந்தையைச் சிறு வயதிலேயே இழந்து விட்ட பாண்டவர்களிடம் நகர மக்கள் கூடுதல்

விருப்பம் உள்ளவர்களாக வாழ்ந்தார்கள். அரசகுமாரர்கள் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கியதால் அவர்களை அரங்கேற்றம் நடத்த ஆசிரியர்களான கிருபரும், துரோணரும் விரும்பினார்கள். அதைப் பிதாமகராகிய வீஷ்மருக்கும் தெரியப் படுத்தினர்.

அரங்கேற்றத்துக்கான நாளும் குறிக்கப் பட்டது. அதற்கான அரங்கமும் அமைக்கப் பட்டது. அரசகுமாரர்களின் திறமைகளைக் காணுவதற்காக, நாட்டில் உள்ள அறிஞர்களும், ஆயுதங்களைக் கையாள்வதில் வல்லவர்களும், வேறு பார்வையாளர்களும் கூடினர். அந்த நாளும் வந்தது. அரங்கம் சனக் கூட்டத்தினால் நிரம்பி வழிந்தது.

அரசகுமாரர்களாகிய கௌரவர்களும், பாண்டவர்களும் தங்கள் ஆசிரியர்களாகிய துரோணரையும், கிருபரையும் வணங்கி விட்டுத் தங்கள் தங்கள் திறமையைக் காட்டினார்கள். அரசகுமாரர்களின் போர்த்திறமை யாவரையும் கவர்ந்து கொண்டது. அவர்களுள்ளும் அருச்சுனனின் வில்திறமையும், துரியோதனனதும்,

வீமனதும் கதாயுதத் திறமைகள், மற்றும் குதிரை ஓட்டம், யானை, தேர்கள் ஆகியவற்றைச் செலுத்தும் திறமைகள் எல்லாம் பெரு விருந்தாக அமைந்தது.

சபையில் உள்ளவர்கள் அரசகுமாரர்களின் போர்த் திறமைகளைக் கண்டு வியப்புற்றுப் போற்றினார்கள். அப்போது தேரோட்டி மகனாக வளர்ந்து வந்த கர்னன் எழுந்தான். அருச்சுனன் செய்த வித்தைகள் அனைத்தையும் தான் செய்து காட்டுவதற்கு துரோணரிடம் அனுமதி கேட்டான். துரோணரும் அனுமதிக்கவே, அருச்சுனன் செய்த வித்தைகள் அனைத்தையுமே அருச்சுனனை விடவும் திறமையாகச் செய்து காட்டினான்.

அருச்சுனனுக்கு மிகவும் வேதனையும் வெட்கமும் உண்டாயிற்று. துரோண, கிருபர்களும் திகைத்தனர். அதேவேளை கர்னன், "அருச்சுனன் சிறந்த வில்லாளியானால் என்னுடன் எதிர்த்துப் போட்டியிட வேண்டும்." என்று அருச்சுனனைப் போட்டிக்கு அழைத்தான்.

-தொடரும்-

# மூன்று மீன்கள்



நீர் நிறைந்த குளத்தில் பல மீன்கள் இருந்தன. கோடை காலத்தில் குளத்தில் உள்ள நீர் வற்றத் தொடங்கியது. அப்பொழுது அந்தக் குளத்தில் மூன்று பெரிய மீன்கள் இருந்தன. அவை: வருமுன் காப்போன், வரும் பொழுது காப்போன், வந்தபின் காப்போன் என்னும் பெயர்களை உடையவை.

அந்தக் குளத்தில் உள்ள மீன்களைப் பிடிக்க, இரண்டு மீனவர்கள் வந்தார்கள். மூன்று பெரிய மீன்களையும் பிடிக்க எண்ணினார்கள். மறுநாள் வலை கொண்டு வந்து பிடிக்கலாம் என்று தங்களுக்குள் கூறிக் கொண்டு சென்றனர்.

இவர்களின் பேச்சை அந்த மீன்கள் கேட்டன. வருமுன் காப்போன் வலையில் அகப்படாமலே தப்புவிக்க எண்ணியது. ஆகையால், அன்றே வாய்க்கால் வழியாகக் கடலை அடைந்தது.

வரும் பொழுது காப்போன் என்னும் மீன். மீனவர்கள் வந்து வலை வீசும் போது தப்புவித்துக் கொள்ளலாம் என்று எண்ணியது. வந்த பின் காப்போன் எதையுமே அசட்டை செய்யாமல் கிடந்தது.

மறு நாள் மீனவர்கள் வந்தார்கள். வலை வீசினார்கள். வரும் பொழுது காப்போன் அகப்பட்டுக் கொண்டது. தப்புவிக்கும் எண்ணத்தில், இறந்தது போலக் கிடந்தது. மீனவர்கள் மீன் செத்து விட்டதாக எண்ணிக் கரையில் வீசினார்கள். உடனே அது துள்ளிக் கொண்டு வாய்க்காலில் பாய்ந்து கடலை அடைந்தது.

மீனவர்கள் மீண்டும் வலை வீசினார்கள். அதில் வந்த பின் காப்போன் மாட்டிக் கொண்டது. ஒன்றும் செய்ய முடியாமல் வலையினுள்ளே அங்கும் இங்கும் அலைந்தது. மீனவர் அதைப் பிடித்துக் கூடையில் போட்டுக் கொண்டனர். முதல் மீன் தன் முன் யோசனையால் பிழைத்தது. இரண்டாவது மீன் தன் தந்திரத்தால் தப்பிக் கொண்டது. மூன்றாவது மீன் முன்யோசனையும், முயற்சியும் இல்லாததால் அகப்பட்டு இறந்தது.

-நிரோஷினி ஹரிச்சந்திரன்-

# பாட்டு



சண்முக்ம ஏழை தான். அவனுககுப் பாட்டு என்றால் உயிர். நன்றாகப் பாடுவான். அவனுடைய வீட்டுக்குப் பக்கத்திலேயே பகவதிப் பண்ணையார் வீடும் இருந்தது. அவர் பாட்டு வாசனையே அறியாதவர். சண்முகம் ஒவ்வொருநாளும் அதிகாலையிலும் மாலை வேளைகளிலும் பாடுவான். பண்ணையாருக்கோ கேட்பதற்குக் கஷ்டமாக இருக்கும்.

அவன் பாடுவதை எப்படியாவது நிறுத்தி விட வேண்டுமென்று பண்ணையார் நினைத்தார். அவனுக்குச் சில்லறைக் காசாகப் பத்தாயிரம் ரூபாய் கொடுத்து, "எண்ணிப்பார். எப்பொழுதோ உனக்குத் தர வேண்டும் என்று எண்ணினேன். இப்பொழுது தான் வேளை வந்தது." என்று சொல்லிக் கொடுத்தார். காசு கொடுத்த பின் பாட்டை அவர் கேட்கவில்லை.

பண்ணையாரும் நிம்மதி அடைந்தார். ஆனால் பாவம் பண்ணையார்!. சிலநாட்களின் பின் "சண்முகம் இசைப் பள்ளி" என்று சண்முகம் வீட்டில் பலகை தொங்கியது. பள்ளியில் காலை மாலை வகுப்புக்கள் நடந்தன. எந்த நேரமும் பாட்டுச் சத்தம் தான். பகவதிப் பண்ணையார் தலையில் அடித்துக் கொண்டார்.

# சொற்களைக் கண்டு பிடியுங்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ம | ரு | த் | து | வ | ன் | ண | த | ந் | அ |
| ஞ் | க | ப | டி | த | ப | மா | டி | து | த் |
| ச | ம் | ப | வ | ம் | ண் | ம | ட் | சே | தி |
| ள் | வு | ட | க | ட | ந | டு | வ | ர் | வா |
| எ | கி | ப் | து | க | ன் | ள | ம் | கு | ர |
| பு | ளி | க | ல் | ய | மை | ட | க | ங் | ம் |
| கை | வ | உ | ச் | சி | ப் | பொ | ழு | து | ணி |
| ல | லை | ப் | டு | ப | ம் | ள | கு | ப | க |
| ப | ட | பு | து | தி | பு | ம் | ல | சி | ல |
| ழி | க | த | வு | சை | ம் | ட | பீ | லி | ப |

## முடிவு திகதி: 05.11.97

நாட்டுக்குத் தேவையானவர்கள் வீரர்கள். நீங்கள் வீரர்களாய் இருங்கள். பாறை போல் உறுதியாய் விளங்குங்கள். வாய்மையே என்றும் வெல்லும்.

– சுவாமி விவேகானந்தர் –

# சூடும் குளிரும்




மழைக் காலத்தில் காட்டு வழியாக நடந்து வந்தார் ஒரு முதியவர். அவரால் குளிரைத் தாங்க முடியவில்லை. தங்குவதற்கு வீடு தேடினார். அண்மையில் காணவில்லை. சிறிது தூரம் நடந்து வந்தார். ஒரு சிறிய குடிசை கண்ணில் பட்டது. அதற்குள் நடுநடுங்கியபடி சென்றார். அங்கிருந்த வேடன் வயோதிபரை வரவேற்றான். "இங்கே, உட்காருங்கள்." என்று அருகில் இருந்த முக்காலியைக் காட்டினான். வயோதிபர் குளிர் தாங்க முடியாமல் வாயால் தன்

கைகளுக்கு ஊதியபடி இருக்கையில் இருந்தார்.

தொடர்ந்தும் அவர் வாயால் கைகளுக்கு ஊதிக் கொண்டிருக்கவே, வேடன் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான். பின் "பெரியவரே, ஏன் உள்ளங்கைகளை வெறும் வாயால் ஊதிக் கொண்டிருக்கிறீர்கள்?." என்று கேட்டான். அதற்கு முதியவர், "குளிரால் கைகள் சில்லிட்டுப் போய் இருக்கின்றன.அவற்றைச் சூடேற்றுவதற்காக வாய் வழியாகக் காற்றை ஊதுகிறேன். இதனால் குளிர் குறையும்." என்றார்.

சிறிது நேரத்தில் சூடான கஞ்சியுடன் வேடன் வந்தான். அக்கஞ்சியை முதியவரிடம் கொடுத்து, "பெரியவரே, இதைக் குடித்துக் குளிரைப் போக்குங்கள்." என்று கூறினான். முதியவர் அந்தக் கஞ்சியை வாயால் ஊதி, ஊதிச் சிறிது சிறிதாகக் குடித்தார். இதைக் கவனித்தான் வேடன். பின் அவரைப் பார்த்து, "இப்பொழுது ஏன் கஞ்சியை வாயால் ஊதுகிறீர்கள்?. கஞ்சி

சூடாகத் தானே இருக்கிறது." என்று கேட்டான்.

"கஞ்சி சூடாகத் தான் இருக்கிறது. அதைக் குளிராக்கத்தான் வாயால் ஊதுகிறேன்." என்று பதில் கூறினார். அவ்வளவு தான் வேடனுக்குக் கோபம் ஏற்பட்டது. அவனால் கோபத்தை அடக்க முடியவில்லை. நீர் பெரிய ஏமாற்றுக்காரனாய் இருக்கிறீர்!. ஒரே வாயிலிருந்து காற்றை ஊதுவதனால் எப்படிச் சூடாக்கவும், குளிர வைக்கவும் முடியும்?. நீர் இங்கே இருக்காதேயும்." என்று சொல்லி அவரை வீட்டை விட்டு விரட்டினான். வேடனின் அறிவீனத்தை எண்ணிக் கவலைப் பட்டுக் கொண்டு குடிசையை விட்டு வெளியேறினார்.

-கபிலன்

பரமசிவம்-

**சிறந்த ஆற்றல்கள் பித்துப் பிடித்த நிலைக்கு மிகவும் நெருங்கியவை. அவற்றின் எல்லைகளைப் பிரிக்கும் கோடுகள் மிக மெல்லியவை.**

**-ஜான் ட்ரெடன்-**




**NEKTAR FÜR KINDER**